008080

<u>சுருக்கம்</u>

இந்து சமய அறநிலையத்துறை – பணியாளர் தொகுதி – பொறியாளர்கள், வரைதொழில் அலுவலர்கள் மற்றும் ஸ்தபதிகள் ஆகிய பணியிடங்கள் கொண்ட திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பாதுகாத்தல் பணிக்கான பணித் தொகுதி (Renovation and Conservation Wing for Tamilnadu Hindu Religious and Charitable Endowments Department) ஏற்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

<u>சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 2–1) துறை</u>

அரசாணை (நிலை) எண். 108

நாள்.09.08.2019
விகாரி, ஆடி – 24
திருவள்ளுவராண்டு–2050
படிக்கப்பட்டவை:

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை கடித ந.க. எண்.52033/2016/எல்5, நாள். 06.09.2018, 03.05.2019 மற்றும் 18.07.2019.

*****

<u>ஆணை:-</u>

இந்து சமய அறநிலையத்துறை செயல்பாடுகள் தொடர்பாக 23.04.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், இந்து சமய அறநிலையத்துறையில் பொறியியல் பிரிவை பலப்படுத்தவும், திருப்பணிகளை விரைவாகவும் முறையாகவும் செயல்படுத்துவதற்கு இந்து சமய அறநிலையத்துறைக்கென திறமை மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த பொறியாளர்கள் மற்றும் ஸ்தபதிகள் கொண்ட ஒரு பொறியியல் பிரிவினை போதுமான பணியிடங்களுடன் ஏற்படுத்த ஆணையிட்டார்.

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் இந்து சமய அறநிலையத்துறையில் தற்போது பொறியியல் பிரிவில் உள்ள பணியிடங்கள் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகளிலிருந்து மாற்றுப் பணி அடிப்படையிலும், தமிழ்நாடு அரசுக்கட்டுமானக் கழகத்திலிருந்து பொறியாளர்கள் மற்றும் வரைவாளர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். எனவே, பிறதுறைகளிலிருந்து மாற்றுப் பணி மூலம் இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரிபவர்கள் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் முடித்தப் பின்னர் மீண்டும் தங்கள் தாய்த்துறைகளுக்கே திரும்பிச் சென்று விடுகின்றனர். பிற அரசுத் துறைகளைச் சார்ந்த பொறியாளர்களின் பதவி உயர்வு மற்றும் மாறுதல் குறித்த நடவடிக்கைகள் அவரவர்களின் தாய்த்துறையிலேயே மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு பதவி உயர்வு மற்றும் மாறுதல் மூலம் அவர்கள் தாய்த்துறையில் நியமிக்கப்படும்போது இந்து சமய அறநிலையத்துறையிலிருந்து அவர்களைத் விடுவிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால், திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளில் தொய்வு ஏற்படுகிறது என இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

..2..

3. மேலும் திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகள், கட்டுமானப் பணிகளை (Civil Works) மட்டும் உள்ளடக்கியதல்ல. திருக்கோயில்களில் வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக தங்கும் விடுதிகள், ஓய்வு அறைகள், கழிப்பறைகள், குடிநீர் தொட்டிகள் முதலிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கான மதிப்பீடுகள் மின்சாதனங்களையும் உள்ளடக்கியதாகும். திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீட்டில் மின் பணிகளுக்கான மதிப்பீடும் கட்டுமானப் பொறியாளர்களாலேயே (Civil Engineers) தயாரிக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு மின் பணியில் போதிய அனுபவம் இல்லாமையால் இப்பணியினை சிறப்பாக மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. பொதுப்பணித்துறை உள்ளிட்ட பிற அரசு துறைகளில் மின் பணிகளுக்கென தகுதிவாய்ந்த மின் பொறியாளர்களைக் கொண்ட தனிப்பிரிவு இயங்கி வருகிறது. எனவே அதனடிப்படையில் இந்து சமய அறநிலைபத்துறையிலும் கட்டுமானப் பணிக்கென தகுதிவாய்ந்த கட்டுமானப் பொறியாளர்களைக் (Civil Engineers) கொண்ட ஒரு பிரிவும், மின் பணிகளுக்கென தகுதிவாய்ந்த மின் பொறியாளர்களைக் (Electrical Engineers) கொண்ட ஒரு பிரிவும் ஏற்படுத்த வேண்டும் என இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. அதனடிப்படையில், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் இந்து சமய அறநிலையத் துறையில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பொறியியல் மற்றும் ஸ்தபதிகள் பணியிடங்களுடன் இந்து சமய அறநிலையத்துறைக்கென கீழ்க்காணும் பணியிடங்களைக் கொண்ட திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பாதுகாத்தல் பணிக்கான பணித் தொகுதி (Renovation and Conservation Wing for Tamilnadu Hindu Religious and Charitable Endowments Department) ஏற்படுத்தி தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

| வ. எண் | பதவி | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | கூடுதலாக ஏற்படுத்த / நீக்கம் செய்யக் கோரும் பணியிட எண்ணிக்கை | மொத்தப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5)=(3)+(4) |
| 1 | தலைமைப் பொறியாளர் | இல்லை | 1 | 1 |
| 2 | கண்காணிப்புப் பொறியாளர் | 1 | 0 | 1 |
| 3 | செயற் பொறியாளர் | 4 | 4 | 8 |
| 4 | உதவி செயற் பொறியாளர் (கட்டுமானம்) | 12 | 1 | 13 |
| 5 | உதவி செயற் பொறியாளர் (மின்) | இல்லை | 7 | 7 |
| 6 | உதவி பொறியாளர் (கட்டுமானம்) | 27 | 5 | 32 |
| 7 | உதவி பொறியாளர் (மின்) | 4 | 9 | 13 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | தலைமை வரைதொழில் அலுவலர் | 5 | –3 | 2 |
| 9 | வரைதொழில் அலுவலர் | 6 | 7 | 13 |
| 10 | இளநிலை வரைதொழில் அலுவலர் | 12 | 20 | 32 |
| | கூடுதல் | 71 | 51 | 122 |

ஸ்தபதிகள்

| வ. எண். | பதவி | அனுமதிக்கப் பட்ட பணியிடம் | கூடுதலாக ஏற்படுத்தக் கோரும் பணியிட எண்ணிக்கை | மொத்தப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5)=(3)+(4) |
| 1 | தலைமை ஸ்தபதி | 1 | – | 1 |
| 2 | மண்டல ஸ்தபதி | 11 | 1 | 12 |
| 3 | உதவி ஸ்தபதி | இல்லை | 30 | 30 |
| கூடுதல் | | 12 | 31 | 43 |

உதவிப் பணியிடங்கள்

| வ. எண் | பதவி | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | கூடுதலாக ஏற்படுத்தக் கோரும் பணியிட எண்ணிக்கை | மொத்தப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5)=(3)+(4) |
| 1 | தட்டச்சர் | 0 | 6 | 6 |
| 2 | ஓட்டுனர் | 1 | 1 | 2 |
| 3 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 2 |
| கூடுதல் | | 2 | 8 | 10 |

தொகுப்பூதியத்தில் வழங்கப்பட்டுவரும் ஸ்தபதி பணியிடங்களை காலமுறை ஊதிய விகிதத்தில் ஏற்படுத்தித் தருமாறு இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் கோரியுள்ளார்.

5. மேலும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மேற்கண்டவாறு தோற்றுவிக்கக்கோரும் பணியிடங்கள் அந்தந்த உதவி ஆணையர், இணை ஆணையர் அலுவலகங்கள் மற்றும் தலைமையிட அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் எனத்

தெரிவித்துள்ளார். எனவே, இப்பணியிடங்களுக்காக தனியே அலுவலகம் ஏற்படுத்தத் தேவையில்லை எனவும் இதனால் கட்டிட வாடகை, மின் கட்டணம், தொலைப்பேசி கட்டணம், பராமரிப்பு செலவினம் உள்ளிட்ட இதர செலவினம் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என ஆணையர் தெரிவித்துள்ளார்.

6. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், அவரது பரிந்துரையை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில் திருப்பணிகளை செம்மையாக செயல்படுத்துவதற்கு இந்து சமய அறநிலையத்துறையில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 85 பொறியாளர், வரைதொழில் அலுவலர் மற்றும் ஸ்தபதி பணியிடங்களுடன் கூடுதலாக 90 பணியிடங்கள் தோற்றுவித்து கீழ்க்காணும் 175 பணியிடங்கள் கொண்ட திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பாதுகாத்தல் பணிக்கான பணித் தொகுதி (Renovation and Conservation Wing for Tamilnadu Hindu Religious and Charitable Endowments Department) ஏற்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | பதவி | அனுமதிக்கப் பட்ட பணியிடங்கள் | தோற்றுவிக்கப்/ நீக்கப்படும் பணியிடங்கள் | மொத்தப் பணியிட எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர் | இல்லை | 1 | 1 | Level 31 125200–219800 |
| 2. | கண்காணிப்புப் பொறியாளர் | 1 | 0 | 1 | Level 28 123100–215900 |
| 3. | செயற்பொறியாளர் | 4 | 4 | 8 | Level 25 59300–187700 |
| 4. | உதவி செயற் பொறியாளர் (கட்டுமானம்) | 12 | 1 | 13 | Level 22 56100–177500 |
| 5. | உதவி செயற் பொறியாளர் (மின்) | இல்லை | 7 | 7 | Level 22 56100–177500 |
| 6. | உதவி பொறியாளர் (கட்டுமானம்) | 27 | 5 | 32 | Level 20 37700–119500 |
| 7. | உதவி பொறியாளர் (மின்) | 4 | 9 | 13 | Level 20 37700–119500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | தலைமை வரைதொழில் அலுவலர் | 5 | –3 | 2 | Level 23<br>56900–180500 |
| 9. | வரைதொழில் அலுவலர் | 6 | 7 | 13 | Level 13<br>35900–113500 |
| 10. | இளநிலை வரைதொழில் அலுவலர் | 12 | 20 | 32 | Level 11<br>35400–112400 |
| 11. | தலைமை ஸ்தபதி (செயற்பொறியாளர் நிலையில் ) | 1 | – | 1 | Level 25<br>59300–187700 |
| 12. | மண்டல ஸ்தபதி (உதவி செயற்பொறியாளர் நிலையில் ) | 11 | 1 | 12 | Level 22<br>56100–177500 |
| 13. | உதவி ஸ்தபதி (உதவி பொறியாளர் நிலையில் ) | இல்லை | 30 | 30 | Level 20<br>37700–119500 |
| 14. | தட்டச்சர் | 0 | 6 | 6 | Level 8<br>19500–62000 |
| 15. | ஓட்டுநர் | 1 | 1 | 2 | Level 8<br>19500–62000 |
| 16. | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 2 | Level 1<br>15700–50000 |
| | மொத்தம் | 85 | 90 | 175 | |

7. மேற்படி பணியிடங்கள் தோற்றுவிப்பதால் ஏற்படும் கீழ்க்காணும் தொடரா செலவினத்திற்கு ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| சீருந்து (Car) | ரூ.7,00,000/– |
| மேஜை, நாற்காலி | ரூ.10,00,000/– |
| தொலைபேசி (இணைப்பு) | ரூ.5,000/– |
| கூடுதல் | ரூ.17,05,000/– |

8. மேலே பத்தி 6 மற்றும் 7–க்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2250–00– ஏனைய சமூகப் பணிகள் – 102. சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் – மாநிலச் செலவினங்கள் – AD – பொறியியல் பணியாளர்கள் – 301. சம்பளங்கள்.
2250– 00– 102– AD- 30100-IFHRMS
2250– 00– 102– AD- 0100-old DPC

"2250–00– ஏனைய சமூகப் பணிகள் – 102. சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் – மாநிலச் செலவினங்கள் – AD – பொறியியல் பணியாளர்கள் – 321. மோட்டார் வண்டிகள்–01.வாங்குதல்
2250– 00– 102– AD- 32101-IFHRMS
2250– 00– 102– AD- 2117-old DPC ரூ.7,00,000/–

2250–00– ஏனைய சமூகப் பணிகள் – 102. சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் – மாநிலச் செலவினங்கள் – AD – பொறியியல் பணியாளர்கள் – 305. அலுவலகச் செலவுகள்–05.அறைகலன்கள்.
2250– 00– 102– AD- 30505-IFHRMS
2250– 00– 102– AD- 0557-old DPC ரூ.10,00,000/–

2250–00– ஏனைய சமூகப் பணிகள் – 102. சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் – மாநிலச் செலவினங்கள் – AD – பொறியியல் பணியாளர்கள் – 305. அலுவலகச் செலவுகள்–01.தொலைபேசி கட்டணங்கள்.
2250– 00– 102– AD- 30501-IFHRMS
2250– 00– 102– AD- 0511-old DPC ரூ.5,000/–

9. மேலே பத்தி 6 மற்றும் 7–இல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2019–2020–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதிபொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2019–2020–ஆம் ஆண்டுக்கான துணை மானியக்கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்யவிருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6 மற்றும் 7–இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட முதன்மைச் செயலாளர்/ ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் மேலே பத்தி 6 மற்றும் 7–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2019–2020–ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதித்(த.வ.(ம)செ/வ.செ.பொ.2)துறைக்கு அனுப்பி வைக்குமாறு முதன்மைச் செயலாளர்/ ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் கோ. எண்.34776 / நிதி (துவ(ம)செ) / 19, நாள் 06.08.2019, அ.சா.எண்.39975/நிதி (மை.ம.ஆ.பி)/19, நாள்.07.08.2019–இல் பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1062 (ஆயிரத்து அறுபத்து இரண்டு) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை செயலாளர் / ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 35 / மதுரை.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
நகல்:-
பொதுப் பணித்துறை/நெடுஞ்சாலைகள் (ம)சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9
நிதி (துவ (ம)செ/வ.செ.பொ.I/ வ.செ.பொ.II) துறை, சென்னை–9
தலைமைச் செயலக அனைத்துத்துறைகள், சென்னை – 9.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஜெ. நந்தினி
13/08/2019
பிரிவு அலுவலர்

13/8/19